# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1897/13 - 2015 ජනවාරි මස 16 වැනි සිකුරාදා - 2015.01.16

*1897/13 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வட மேல் மாகாண மாகாண சபை

மாநகர சபை விதி

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநிகழ்வு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய 252 ஆம் அத்தியாயத்தின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சர் ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி மாநகர சபை மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்காக கொடுப்பனவு செலுத்துவதற்கு இத்துடன் கட்டளை பிறப்பிக்கின்றேன். இந்த கட்டளை 2014.11.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.*

சட்டத்தரணி, ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர,
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,
நீதியும் சமாதானமும், உள்ளூராட்சிமன்றமும் மாகாண நிர்வாகமும்,
மனிதவளம், கல்வியும் கலாசார அலுவல்களும், காணி, சூழல், சுற்றுலா,
முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கல்,
விநியோக அமைச்சரும்.

வடமேல் மாகாண முதலமைச்சு,
குருநாகல்,
*2014, திசெம்பர் 22.*

#### கட்டளை

1. இந்த கட்டளை மாநகர சபைகளின் மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்காக கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய கட்டளையாக அறிமுகப்படுத்தப்படும்.

2. மாநகர சபைகளில் மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்காக கீழ் காணப்படும் தொடர்படி மாதாந்த கொடுப்பனவாக செலுத்தப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| மாநகர முதல்வர் | ரூபா 30,000.00 |
| பிரதி மாநகர முதல்வர் | ரூபா 25,000.00 |
| உறுப்பினர்கள் | ரூபா 20,000.00 |

3 (அ) கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் மாநகர சபைகளின் மா நகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவார்கள்.

(i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபை கூட்டத்திற்கும் செயற்குழு கூட்டங்களுக்கும் சபையின் அனுமதியின்றி கலந்துக் கொள்ளலாமை ;

(ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை ;

(iii) வடமேல் மாகாண சபையில் 1991 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி சபை (நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம்) கட்டளைப்படி அல்லது மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவின் கீழ் மாநகர சபை உறுப்பினர்களின் நடவடிக்கை மற்றும் அலுவல்களை தடை செய்திருத்தல்.

என்றாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் ஏதாவதொரு மாதத்தின் ஒரு பகுதியாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மீதி காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்த கொடுப்பனவு செலுத்தலாம்.

(ஆ) இந்த கட்டளையின் (அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபைக் கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரித்தற்று போகலாகாது.

1-721/1

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

நகர சபை விதி

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநிகழ்வு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய 255 ஆம் அத்தியாயத்தின் நகர சபை கட்டளைச் சட்டத்தின் 193 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சர் ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி நகர சபைகளின் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்காக கொடுப்பனவு செலுத்துவதற்குரிய இத்துடன் கட்டளைப் பிறப்பிக்கின்றேன். இந்த கட்டளை 2014.11.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

சட்டத்தரணி, ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர,
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,
நீதியும் சமாதானமும், உள்ளூராட்சிமன்றமும் மாகாண நிர்வாகமும்,
மனிதவளம், கல்வியும் கலாசார அலுவல்களும், காணி, சூழல், சுற்றுலா,
முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கல்,
விநியோக அமைச்சரும்.

வடமேல் மாகாண முதலமைச்சு,
குருநாகல்,
2014, திசெம்பர் 22.

**கட்டளை**

1. இந்த கட்டளை நகர சபைகளில் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்காக கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய கட்டளையாக அறிமுகப்படுத்தப்படும்.

2. நகர சபைகளில் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்காக கீழ் காணப்படும் தொடர்படி மாதாந்த கொடுப்பனவாக செலுத்தப்படல் வேண்டும்.

| | ரூபா |
|---|---|
| தலைவர் | 25,000.00 |
| உப தலைவர் | 20,000.00 |
| உறுப்பினர்கள் | 15,000.00 |

3 (அ) கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் நகர சபைகளின் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவார்கள்.

(i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்திற்கும் செயற்குழு கூட்டங்களுக்கும் சபையின் அனுமதியின்றி கலந்துக் கொள்ளலாமை ;

(ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை அல்லது சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை ;

(iii) வடமேல் மாகாண சபையில் 1991 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி சபை (நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம்) கட்டளைப்படி அல்லது நகர சபை கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் நகர சபை உறுப்பினர்களின் நடவடிக்கை மற்றும் அலுவல்களை தடை செய்திருத்தல்.

என்றாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் ஏதாவதொரு மாதத்தின் ஒரு பகுதியாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மீதி காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்த கொடுப்பனவு செலுத்தலாம்.

(ஆ) இந்த கட்டளையின் (அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபைக் கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரித்தற்று போகலாகாது.

1 - 721/2

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

பிரதேச சபை விதி

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநிகழ்வு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சர் ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி பிரதேச சபைகளில் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்காக கொடுப்பனவு செலுத்துவதற்குரிய இத்துடன் கட்டளையைப் பிறப்பிக்கின்றேன். இந்த கட்டளை 2014.11.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

சட்டத்தரணி, ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர,
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி, திட்டமிடல்,
நீதியும் சமாதானமும், உள்ளூராட்சிமன்றமும் மாகாண நிர்வாகமும்,
மனிதவளம், கல்வியும் கலாச்சார அலுவல்களும், காணி, சூழல், சுற்றுலா,
முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கல்,
விநியோக அமைச்சரும்.

வடமேல் மாகாண முதலமைச்சு,
குருநாகல்,
2014, திசெம்பர் 22.

**கட்டளை**

1. இந்த கட்டளை பிரதேச சபைகளில் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்காக கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய கட்டளையாக அறிமுகப்படுத்தப்படும்.

2. பிரதேச சபைகளில் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்காக கீழ் காணப்படும் தொடர்படி மாதாந்த கொடுப்பனவாக செலுத்தப்படல் வேண்டும்.

| | ரூபா |
|---|---|
| தலைவர் | 25,000.00 |
| உப தலைவர் | 20,000.00 |
| உறுப்பினர்கள் | 15,000.00 |

3 (அ) கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் பிரதேச சபைகளில் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவார்கள்.

(i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபை கூட்டத்திற்கும் செயற்குழு கூட்டங்களுக்கும் சபையின் அனுமதியின்றி கலந்துக் கொள்ளலாமை ;

(ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை அல்லது சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை ;

(iii) வடமேல் மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி சபை (நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம்) கட்டளைப்படி அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபை உறுப்பினர்களின் நடவடிக்கை மற்றும் அலுவல்களை தடை செய்திருத்தல்.

என்றாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் ஏதாவதொரு மாதத்தின் ஒரு பகுதியாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மீதி காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்த கொடுப்பனவு செலுத்தலாம்.

(ஆ) இந்த கட்டளையின் (அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபை கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரித்தற்று போகலாகாது.

1- 721/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.